**செ.வெ.எண்:15** **நாள்:06.03.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ரூ.80 இலட்சம் மதிப்பில் கருவி மற்றும் அச்சு செய்பவர் தொழிற்பிரிவுக்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டிடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்கள் இன்று (06.03.2020) காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

இக்கட்டிடத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்களும் குத்துவிளக்கேற்றி, இனிப்புகள் வழங்கி, பார்வையிட்டார்கள்.

இக்கட்டிடத்தில், கருவி மற்றும் அச்சு செய்பவர் தொழிற்பிரிவுக்கான பணிமனை மற்றும் வகுப்பறை ஆகியவை உள்ளன. இக்கட்டிடத்தினை இன்று (06.03.2020) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர் மருதமுத்து, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராமச்சந்திரன், அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் முத்துகுமரன் (ஆண்டிமடம்), ந.நாகராஜன் (அரியலூர்), கூவத்தூர் கூட்டுறவு சங்க தலைவர் கலையரசன், ஊராட்சி மன்றத் தலைவர் டேவிட், வட்டாட்சியர் குமரய்யா மற்றும் அலுவலர்கள், மாணவர்கள், பயிற்றுநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**